[1973 நவம்பர் 26

உதகையிலிருந்து கள்ளிக்கோட்டைக்கும், மைசூருக்கும் விரைவுப் பேருந்துகள்.

***415. வினு—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்திற்கும் கள்ளிக்கோட்டைக்கும், உதக மண்டலத்திற்கும் மைசூருக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் சாதாரண பேருந்துகளை விரைவுப் பேருந்துகளாக விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த ஆலோசனையின்படி அங்கே துரித வண்டிகள் விடப்பட வேண்டுமென்ற யோசனை இருந்ததே, அது ஏன் கைவிடப் பட்டது ? அது கைவிடப்பட்டதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துரித வண்டிகளில் செல்ல கட்டணம் அதிகமாகச் செலுத்தவேண்டியிருப்பதால் போதுமான பயணிகள் வருவார்கள் என்று அரசு எதிர்பார்க்க வில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, உதகையிலிருந்து பெங்களூருக்கு துரிதவண்டி விடுவதாக அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே கூறியிருக்கிறுர்கள். அதையொட்டி அவர்களும் பெங்களூருக்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்தினுர்கள். இருந்தாலும் அந்தத் திட்டம் இன்னும் செயல்படாமல் இருப் பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காரணம் வேறு ஒன்றும் இல்லை. கர்நாடாக மாநில அரசோடு நாம் செய்துக் கொண்ட ஒப்பந்தம் கர்நாடக உயர்நீதி மன்றத்திலே தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது.